Reg. No. M. 2997. தனிப்பிரதி அணு 1

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம் —
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நே. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ—ஹு புரட்டாசி—மீ ௫ உ (20 9 34) } No. 43.

திருமந்திரம்

அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவ
மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமற் பரிகரித் துத்தம்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே.

தலைவனு மாயிடுந் தன்வழி ஞானந்
தலைவனு மாயிடுந் தன்வழி போகந்
தலைவனு மாயிடுந் தன்வழி யுள்ளே
தலைவனு மாயிடுந் தன்வழி யஞ்சே.

எய்ந்த பிராய மிருபது முப்பதும்
வாய்ந்த குழலிக்கு மன்னர்க்கு மானந்த
மாய்ந்த குழலியோ டைந்து மலர்ந்திடச்
சோர்ந்தன சித்தமுஞ் சோர்வில்லை வெள்ளிக்கே.

வெள்ளி யுருகியே பொன்வழி யோடாமே
கள்ளத் தட்டானார் கரியிட்டு மூடினார்
கொள்ளி பறியக் குழல்வழி யேசென்று
வள்ளிய ளுவி லடக்கிவைத் தாரே.

வைத்த விருவருந் தம்மின் மகிழ்ந்துடன்
சித்தங் கலங்காது செய்கின்ற வானந்தம்
பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்
வித்தக னாய்நிற்கும் வெங்கதி ரோனே.

மின்னிடை யாளுமின் னாளனுங் கூட்டத்துப்
பொன்னிடை வட்டத்தி னுள்ளே புகப்பெய்து
தன்னொடு தன்னைத் தலைப்பெய்த வல்லிரேல்
மண்ணிடைப் பல்லூழி வாழலு மாங்கே.

உ
திருவருள் துணை

ஓம்
நந்திபதி
கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை.

பவ-வருஷ புரட்டாசி-மீ 5உ

நிறை முறை இல்லாக் கற்பனை

உண்மைகள் கற்பனை வாயிலாகவே உலகினர்க்கு உணர்த்தப்படும். வேறு வாயில் இல்லை. நிறை முறையோடு கூடிய கற்பனைகள் உண்மைக் கற்பனைகளாம். நிறை முறை இல்லாத கற்பனைகள் பொய்க் கற்பனைகளாம். உண்மைக் கற்பனைகளை ஆராயுமிடத்து உண்மையே புலப்படும். அவை அரிய பெரிய உண்மைகளாகிய மறைகளையே அடிப்படையாகக் கொண்டு மிளிர்வனவாகும். பொய்க் கற்பனைகளை ஆராயுமிடத்துப் பொய்யே புலப்படும். பொய்ம்மையே அவற்றிற்கு அடிப்படையாகும். உண்மையை அநுபவமாக உணர்ந்த தத்துவப் பெரியார் அருளிய — சிவவாக்குக்களாகிய வேத நூல்கள் எல்லாம் நிறை முறை அமைந்த கற்பனைகளாய் அரிய பெரிய உண்மைகளையே கௌணமாய்—மறை பொருளாய் உணர்த்துவனவாகும். முப்புர தகனம் அமிர்த மதனம் காலனையுதைத்தல் கங்கையின் வரலாறு முதலிய கற்பனைக் கதைகள் எல்லாம் ("வித்தகம்" இல. 39 இல் "கற்பனை" என்னும் கட்டுரையை நோக்குக) நிறை முறை அமைந்தனவாய் அரிய பெரிய உண்மைகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

திருமந்திரம்

அப்பணி செஞ்சடை யாதிபு ராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர்
[கண்
முப்புர மாவது மும்மல காரிய
மப்புர மெய்தமை யாரறி வாரே.

(அடி 2-ம் தந். பதிலவியில் வீரட்டமெட்டு
செ. 5.)

உடலுயிரைப்பற்றிய மும்மலமும் ஒழிவதே முப்புர தகனக் கற்பனையின் உண்மைப்பொருள் என்பதும், தூலப் பொருள் கண்டு அமைவார் மூடர் என்பதும் இம் மந்திரத்தால் நன்று வலியுறுத்தப்பட்டமை கண்டுகொள்க. இவ்வாறு உண்மைப் பொருளை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாதவரே கற்பனைகளுக்குத் தூலப்பொருள் கண்டு இடர்ப்படுகின்றனர்; சமயத்தைப் புறப்பழிக்கின்றனர்; உண்மைக் கற்பனைகளுக்கும் பொய்க் கற்பனைகளுக்கும் பேதம் காணமுடியாது மயங்குகின்றனர். உண்மையை உணரும் ஆற்றலும் காதலும் இல்லாத உலகமாக்களால் கூறப்படுவன நிறை முறை இல்லாப் போலிக் கற்பனைகளாம். காய்தல் உவத்தல் அகற்றி இவற்றை ஆராயுங்கால் பொய்யே புலப்படுகின்றது. பயனும் அதுவே ஆம். சந்தானகுரவர் எனப் போற்றப்படும் பெரியாருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியர் என்பார் நடராஜப் பெருமான் அனுப்பியதாகக் கூறப்பட்ட சிபாரிசுக் கடிதத்தின்படி பெற்றான் சாம்பானையும் தமது பூஜா மூர்த்தியின் அபிஷேக நீரை உண்டமையால் முத்தியடையும் பக்குவம் பொலியப் பெற்றதெனப் புகழப்பட்ட முள்ளிச் செடியையும் கணப்பொழுதினுள்ளே சோதியில்மறைந்து முத்தியடையச் செய்துவிட்டனர் எனவும், மெய்யடியாராகிய நந்தனார் பார்ப்பனச் சாதியாளர் ஒருவருக்கு அடிமையாய் இருந்தனர் எனவும் எழுதிவைக்கப்பட்டன போல்வன நிறை முறை இல்லாப் பொய்க்கற்பனைகளாம். இவற்றுள் உமாபதி சிவாசாரியர் முத்தியளித்தனர் என எழுதிவைக்கப்பட்ட உபகதை பொய்க் கற்பனையே என்பதனை ஈண்டு ஒரு சிறிது விளக்கிக் காட்டுமுகத்தால் நிறை முறை இல்லாக் கற்பனைகளின் பெற்றி ஒருவாறு உணர்த்தப்படும்.

உலகியலை நோக்குமிடத்துச் சந்தான குரவர் எனப் போற்றப்படும் பெரியார் படிப்பு கடவுள் வழிபாடு செல்வம் அதிகாரம் முதலியவற்றால் தற்காலத்தவரினும் எத்துணையோ மடங்கு சிறந்தவரே என்பது எவராலும் மறுக்க முடியாததே!. அவர்தம் செவ்விய புலமைத்திறனும் கடவுட் பத்தியும் அவர் இயற்றிய நூல்களால் நன்று புலப்படுகின்றன. ஆனால், தத்துவங்களை அநுபவமாகக் கண்டு அவற்றை வாய்மையாக நியதி செய்து — அவை ஒவ்வொன்றையும் கடந்து (கடத்தல் — வெல்லல்—அடிமை கொள்ளல்) அது அது ஆன—தத்துவம் ஆன தத்துவ ஞானிகள்—தத்துவப்பெரியார் எனவும், மாற்றிப் பிறந்து காலனை உதைத்தவர் எனவும், சமயகுரவருக்கு ஒப்பானவர் எனவும், சமயகுரவர்போல மறைகளை அருளிச் செய்தவர் எனவும், சமய குரவர்போல மீண்டுவாரா நெறியை அடைந்தவர் எனவும் அவர் மாட்டு வைத்த காதல் மிகுதியால் இல்லன கூறி அவரைப் புகழ்வது என்றால், அந்தோ! அதை

அப்பெரியாரை இகழ்வதேயன்றி வேறு என்னாகும்? இதனைத் தற்காலச் சைவ உலகம் முக்கியமாக அறிந்து கொள்ளவேண்டியதே! பொய்யான—நிறை முறை இல்லாத கற்பனையால் ஏதப்பாடு உண்டு' என்பதனை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத அபிமானிகளாகிய போலி வித்துவப்புலிகள் சிலர் உமாபதி சிவாசாரியார் என்னும் சிவநேசாது பெருமைக்கே கேடு சூழ்வாராயினர். அறியாமைப் பயனாக எழுந்த இன்னோரன்ன பொய்க் கற்பனைகள் காலந்தோறும் கையறியா மாக்களால் நமது சைவ சமயத்துள் அஞ்சாது புகுத்தப்பட்டமையே உண்மை மறைந்து அரிய பெரிய சைவமும் மற்றைய மதங்களுள் ஒன்றாகக் கணிக்கப்படுதற்கு ஏதுவாயிற்று என்று அறிதல் வேண்டும். உலகமாக்கள் அந்தோ! அந்தோ! முத்தி என்பதனைச் சிற்சில உபாயங்களாற்றான் — நடைகொடி பாவனைகளாற்றான் மரணமடைந்தபின் மிக எளிதில் அடையத்தக்க தொன்றாக மதித்து உண்மைக்கு மாறாகப் போராடி மாண்டு போயினர் —மாண்டு போகின்றனர். எல்லாம் வல்ல இறைவனால் பக்குவ சீவர்களுக்கு அளிக்கப்படும் முத்தி நிலையை சீவர்கள் சீவர்களுக்கு எளிதின் அளித்து விடுவார்கள் என நம்பியிருத்தலினும் மிக்க அறியாமை பிறிதுண்டா?

சூத சங்கிதை

வயங்குசிவப் பிரகாச முண்டாகில்
எவ்வுயிரும் மருவும் ஞானம்
பயங்குலவு முனின்மேனி காரணனும்
யானுமற்றைப் பண்புளோரும்
தயங்கு • சிவஞானமோருயிர்க்களிக்கத்
தக்க சுதந்தரரே யல்லர்
நயங்குலவு கிரமசாதகர்களாயே
யிருப்பே நன்மைமிக்கீர்.

(ஷை சாமசாகோபநிடத தாத்பரிய முரைத்த அத்தியாயம் செ. 14.)

இதனால் உண்மை முத்தி நிலையானது எல்லாம் வல்ல இறைவனலன்றிச் சிருட்டித் திதி கர்த்தர்களாலும் அளித்தற்கு அரியதென்பது நன்று வலியுறுதல் கண்டு கொள்க.

உண்மை முத்தியடைந்த தத்துவப் பெரியார் பாடல்கள் எல்லாம் உடலோடு அடைதலே உண்மை முத்தி எனவும், அதற்குரிய சாதக யோகங்களைச் சற்குருநாதன்பால் பெற்று அவற்றை வழுவறத்தாங்கி ஒழுகுதற்கண் அஃதாவது காயமாயத்தைக் கழித்து — மாற்றிப் பிறந்து அமல தநுவைப் பெறுதற்கண் அப்மெய்யடியார் அடைந்த துன்பங்கள் அளப்பில எனவும் நன்ற உறுதிப்படுத்தி முறையிடுகின்றன [திருவாசகம் திருச்சதகம் செ. 33, 35, 38, 40, 44, 54, 55, 56, 64, 83, 92, 100; நீத்தல் விண்ணப்பம் செ. 42, 45; செத்திலாப்பத்து செ. 2, 5, 6; அடைக்கலப் பத்து செ. 5; ஆசைப்பத்து செ. 1, 2, 3, 9; பிரார்த்தனைப்பத்து செ. 2, 3, 7, 10; குலாப்பத்து செ. 3, 6; குழைத்தபத்து செ. 2; யாத்திரைப்பத்து செ. 4, 5; அப்பர் தேவாரம், தனித்திரு நேரிசை செ. 7 முதலியனவற்றையும் இதுவரை "வித்தக"த்தில் வெளிவந்த கட்டுரைகள் பலவற்றையும் பிரமாணச் செய்யுட்களையும் நோக்கி உண்மை கண்டு கொள்ளப்படுக.] காயமாயம் கழிதல் என்றால்—மாற்றிப் பிறத்தல் என்றால் —அசுத்த மாயா தநுவாகிய மருளுடம்பு சாதலைத்தரும் அசுத்த நிறை நீங்கி அமலமடைந்து சூக்குமமாதல் என்றால் எளிதின் முடியுமா? மெய்யடியார் பலகாலம் அடைந்த துன்பங்கள் நம்மனோர் சிந்தனை சொற்செயல்களுக்கு அளவுபடுவனவாகுமா? "பையவே கொடுபோந்து பாசமெனும் தாழ் உருவி உய்யு நெறிகாட்டுவிக்கும்" (திருவாசகம்) திறன் யாரால் அறிய முடியும்? அயன் கையெழுத்தைக் கிழித்து விதியை வெல்வது என்றால் சிலகாலத்தில்—கணப்பொழுதில் முடிந்துவிடுமா? இவ்வுண்மைகளை ஒரு சிறிதாவது அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத அசடர் சிலர், பெற்றான் சாம்பான் (ஒருவரா? இருவரா?) என்பவனுக்கு இயற்கையாய் உள்ள "துவந்துவங்கள்" உமாபதி சிவாசாரியர் செய்த "நிர்வாணதிக்கை"யால் இயற்கை விரோதமாக ஒரே கணத்தில் தூய்மை செய்யப்பட்டு அக்கணத்தேயே முன்னிலை ஆசான் தன்னிலையாகி உடனே அவன் தூலம் அமலமடைந்து அள்ளுருக்கையாய்ச் சூக்குமமாய் அருட் சோதிவடிவாய் ஞானாகாசத்தில் மறைந்து விட்டது என்று உபகதை எழுதிவைத்தனர் என்றால், இயற்கையின் திறனை உணர வல்ல அறிவுடையோர் இதனை எவ்வாறு ஒப்புக்கொள்வர்? இக் கூற்று இவ்வாறான உபகதை எழுதப்பட்ட காலத்தவர் சிலரால் நம்பப்பட்டது என்பார் உளராயினும், உண்மைச் சைவம் இன்னது எனவும், அது சில மரபினர்க்கு மட்டுமே உரியதாகாது உலகினர் யாவராலும் கைக்கொள்ளப் படவேண்டியது எனவும் வெள்ளிடைமலைபோல விளங்கத் தொடங்கும் இக்காலத்தில், சுருதி யுத்திகளுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத இது போன்ற நிறைமுறை இல்லாக் கற்பனைகளாகிய வெற்றுரைகளை உலகமாக்கள் ஆராயாது குருட்டுத்தனமாக நம்பும்படி செய்து, அரிய பெரிய சைவ சமயத்தைப் புறமதத்தவரும் எள்ளி நகையாடும்படி செய்து விடுவது பாதகத்தினும் பாதகம் அல்லவா? எல்லாம் வல்ல இறைவனால் பக்குவசீவர்களுக்கு அளிக்கப்படும் முத்தியை ஒரு சீவன் மற்றொரு சீவனுக்கு அளித்துவிட வல்லதாகுமா? பக்குவ ஆன்மாக்களின் தவவலிமைக்கு ஏற்ப அவர்கள்பால் சிற்சில அரிய பெரிய சித்திகள் கடவுள் அருளால் நிகழ்ந்து வரும் என்பது உண்மையே! ஆக்கல் அழித்தல் சாபாநுக்கிரகம் என்பனவாகிய சிற்சில சித்திகள் மெய்யடியார் பால் நிகழ்தல் கூடும். ஞானசம்பந்தர் முதலிய தத்துவப்பெரியார்பால் சில அருட் புதுமைகள் நிகழ்ந்தன. உபாசக நிட்டையாளரும் உபாசனைச் சாமிமார் சிலரும் தம்தம் முனைப்பால்—மன

வலியால் (Will Power) சிற்சில மருட் புதுமைகளை உஞற்றிவிட்டனர்—உஞற்றுகின்றனர். இதுபற்றி எல்லாம் வல்ல பரம்பொருள் தனக்கேயன்றி பிறர்க்கு ஒருபோதும் உரிமையாகாத "முத்தியளித்தல்" என்னும் அரிய பெரிய சத்தியை—அதிகாரத்தை எத்துணைப் பெரிய தவத்தினராயினும் அவர்க்கு வழங்குவான் என்று கூறத்துணியலாமா? இவ் அரிய பெரிய சத்தியை உபாசக நிட்டையாளராகிய உமாபதி சிவம் என்பவருக்குத்தான் சிவன் முத்தராய் வதிந்து உண்மைச் சைவ முத்தியடைந்த மணிவாசகர், மூவர், திருமூலர், நந்தனர், பட்டினத்தடிகள், முத்துத்தாண்டவர் முதலிய தத்துவப் பெரியாருக்குத்தான் அப்பரம்பொருள் வழங்குவானே? இன்னோர் அந்நிலையைத் தாம் அடையுமுன்னே பிறர்க்கு வழங்கிவிட்டனர் என்பது மலடி மகன் முயற்கொம்பில் ஏறி ஆகாயப்பூவைச் சூடினன் என்னும் உபகதையையே ஒக்குமன்றி வேறு என்னை? முள்ளிச் செடியையும் உமாபதி சிவாசாரியர் சோதியாய் மறையச் செய்துவிட்டனர் எனவும் அச்செடிக்குச் சோதியாய் மாறும் பக்குவம் அன்னவர் பூஜா மூர்த்தியின் அபிஷேக நீரை உண்டமையால் சேர்ந்துவிட்டது எனவும் பொருந்தாக் கற்பனையாகிய விளையாட்டுக் கதை புனையப்பட்டது. இன்னோரன்ன விளையாட்டுக் கற்பனையெல்லாம் "முத்திநெறி யறியாத மூர்க்கர்" (திருவாசகம்) செயலேயன்றி வேறு என்னை?

சுத்தசாதகம் கூறியபடி, (செ. 80, 81) ஓ வடிவம் பெற்ற சிவன்முத்தன் உலகில் தனது நிலையை அடையும் பக்குவமுடையவனை அறிந்து அவன் சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு ஏற்ற சாதக யோகங்களால் அவனையும் தான் அடைந்த ஓ வடிவத்தை அடையச் செய்யலாமேயன்றி, அச் சிவன் முத்தன் தானே அப்பொழுது அடையப் பெறாத ஒரு நிலையை அஃதாவது அருளாய் வெளியாய் மறைதலாகிய உண்மை முத்தி நிலையை அவனுக்கு அளித்துவிட முடியுமா? முடியும் என்று அறிவுடையோர் கூறத் துணிவாரா? "ஆட்பாலவருக்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும், கேட்பான் புகில் அளவில்லை கிளக்கவேண்டா" என்னும் ஞானசம்பந்தர் திருப்பாசுரம் சீவர்கள் சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு ஏற்ப எம்பெருமான் அருளும் விதிகள்—வேதாகம கட்டங்கள் அளவு படாதன என்பதைக் கூற எழுந்ததேயன்றி முத்தி அளித்தலையும் முத்திநிலையையும் குறித்ததன்று. அது "கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை தாட்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்கதக்கார்" (ஷை பாசுரம்) என்பதனால் நன்று வலியுறுகின்றது. தக்கார் = பக்குவசீவர். இப் பாசுரத்தில் "அளவில்லை கிளக்கவேண்டா" எனக் கூறப்பட்டது முத்தி நிலையையே எனவும், ஆதலால், உடலொடு அடைதலும் உடலைவிட்டு உயிர்பிரிதலாகிய மரணமும் ஆகிய இருவகையும் முத்திதான் எனவும் சாட்டுக்கூறி அமைகின்றாரும் உளர். "அளவில்லை கிளக்கவேண்டா" என்பதன் பொருளையும் அறியமுடியாத ஏழை மதியுடையார் இவர் என்றே கூறற்பாற்று. சாதக யோகங்களே சீவர்தோறும் பக்குவங்களுக்கு ஏற்ப வெவ்வேறாய் அளவுபடாதன என்பது வெள்ளிடை. விரிப்பிற்பெருகும். அமயம் நேரும்போது விரித்து விளக்கப்படும்.

சத்தும் சித்தும் அந்நியோந்நிய சம்பந்தம் உடையனவாதலால், தம்முள்ளே எவ்வெச் சத்திகள் ஆக்கமுற்று வியாபகம் பெறவேண்டுமோ, அவ்வச்சத்திகளை அடைதற்கு ஏற்ற சாதக யோகங்களைச் சற்குருநாதன் அருளால் பெற்று அவற்றை வழுவற அநுட்டித்துப் பயனடைந்த பின் அவ்வச்சத்திகளால் சிற்சில தெய்வாதீனமான காரியங்களை முடித்தற்பொருட்டு முன்னிலையோர் வியப்படையும் வண்ணம் திருவருட் செயலாகச் சிற்சில சித்திகளை மெய்யடியார் உஞற்றினர் என்பது உண்மையே! இத்தன்மைவாய்ந்த மெய்யடியார் எம்பெருமானுக்கே இயற்கையாக அமையப் பெற்றதும் அவனுக்கேயன்றி வேறு எவருக்கும் எக்காலத்தும் அமைய முடியாததுமான "முத்தியளித்தல்" என்னும் அரிய பெரிய சத்தியை அநுக்கிரக கிருத்தியத்தை வகித்து நடாத்த வல்லராவாரா? உண்மை இவ்வாறாக, பெற்றான் சாம்பான் என்பவனுக்கு என்ன நிலைமையைத்தான் பக்குவத்தைத்தான் கற்பிக்கவேண்டியது? உலக சம்பிரதாயமாகச் சிவாசாரியர் சாம்பானுக்கு "நிர்வாண தீக்கை" பண்ணிவிட்டாரா? "தீக்கை" என்றால் என்னை? "மெய்த்தாள் அகம்படி மேவிய நந்தியைக் கைத்தாழ் கொண்டு ஆரும் திறந்து அறிவார் இல்லை" (திருமந்திரம்) என்னும் திருமூலர் திருவாக்கின் பொருள் என்னை? "பாசம் எனும் தாழ் உருவி" (திருவாசகம்) என்னும் மாணிக்கத் திருவாக்கின் பொருள் என்னை? ஆகமங்களில் கூறப்பட்ட "ம்ருத தீக்ஷை" என்பது யாது? இத்தகைய தீக்கையை அளித்தற்கும் அதனைப் பெறுதற்கும் உரியவர் யார்? தீக்கையைக் குறித்துச் சுத்தசாதகம் யாது கூறிற்று? (ஷை 80ம் செய்யுளை நோக்குக.) உமாபதி சிவாசாரியர் என்பார் சற்குருநாதன் அருளால் வாய்மையையான சாதக யோகங்களை அநுட்டித்துத் தம்முள்ளே குரு தரிசனம்பெற்று, முன்னிலை ஆசான் தன்னிலையாகித் தமது தூலம் பூரண அமலமடையப் பெற்றுத் "தான் அவன் ஆகும் சமாதி கைகூடி" "ஊனமில் காயம்" (திருமந்திரம்) என்னும் ஓ வடிவம் (பிரணவமந்திர சரீரம்) பெற்றுச் சிவன் முத்தராய் உலககுருவாய் உண்மைத் தீக்கை அளித்தற்கு அருகராய் வதிந்தனரா? ஆம் எனின், அவர் மற்றைய தத்துவப்பெரியார் போல உலகு கண்டு போற்ற உடலோடு சிதாகாசப் பெருவெளியில் மறைந்து உண்மை முத்தி அடையாது அவர்

தூலம் மருளுடம்பினராகிய மற்றைய உபாசக நிட்டையாளர் தூலம் போலப் பிணமாக நிலத்துட் புதைக்கப்பட்டது என்னை?

அவர் தீக்கையைப் பெற்ற சாம்பான் எப்பொழுது சாதகயோகங்களை அநுட்டித்தான்? எப்பொழுது இருவினை ஒப்பு மலபரிபாகம் வாய்ந்து தன்னுள்ளே குரு தரிசனம் பெற்றான்? எப்பொழுது அமலப் படியேற்றம் பெற்றான்? எப்பொழுது ஓ வடிவம் பெற்றுச் சிவன் முத்தனானான்? மெய்யடியார் எல்லாம் பலகாலம் எத்துணையோ துன்பங்களை அடைந்து இவ் அரிய பெரிய நிலையைப் பெற்றனராகவும், இவை யெல்லாம் சாம்பானுக்குச் சிவாசாரியர் பார்வையால்—தீக்கையால் கணப்பொழுதினுள்ளே நிகழ்ந்து சோதியும் தோன்றி விட்டதா? ஆ! ஆ! "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகி வாய்மையான சாதக யோகங்களால் படி முறையான் ஆக்க முற்றுப் பூரணப்படும் அருட்சோதி என்பது செப்படிவித்தை குறளிவித்தை, இந்திர சாலவித்தைகள் போலக் கணப் பொழுதினுள்ளே சிலர்களால் போலியாகக் காட்டப்படும் எளியதோர் பொருளேயாகுமா? சோதி தோன்றுதலைக் குறித்து எம் அண்ணல் திருமூலர் யாது கூறுகின்றார்? பின்வரும் பிரமாணத்தை நுண்ணுணர்வால் கண்டு தெளிக.

திருமந்திரம்

விந்துவு நாதமுமேருவி லோங்கிடில்
சந்தியிலான சமாதியிற் கூடிடும்
அந்தமி லாத அறிவி னரும்பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே.

(ஷை 3ம் தந் சமாதி—செ 2).

விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடல் = மனமும்மதியும் ஒன்றுதல். வாய்மையான சாதக யோகங்களை எத்துணையோ கஷ்டங்களோடு வழுவற அநுட்டித்த மெய்யடியார்க்கு அல்லவா இப்பேற்றி கைகூடப்பெறுவது? "கலங்கினேன் கலங்காமலே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே" (திருவாசகம்) என்றனர் மணிவாசகர் அல்லவா? இஞ்ஞான்று அல்லவா சோதி காணப்படுவது — தன்னுள்ளே குரு தரிசனம் பெறுவது? இது கணப்பொழுதில் காட்டப்படுவது — காணப்படுவது என்பது சைவம் அறியார் கூற்றேயன்றி வேறு என்னை? கணப்பொழுதில் சோதி தோன்றியதும் அதனுள்ளே சிவாசாரியர் சாம்பானைத் தள்ளி விட்டனரா? உலகத்தவர் கண்டு போற்றும்படி இவ் அரிய பெரிய சம்பவம் நிகழும் என்ற சுருதிக்கு முரணாக (திருவாசகம் சிவபுராணம்; சுத்த சாதகம், செ. 19) அவ் ஊரவர் தாமும் அறியாது உமாபதி சிவமும் அவர் சமயற்காரனுமே (பரிசாரகன்) அறியும்படி நிகழ்ந்ததாகக் கூறப்பட்ட இச்சம்பவத்தைப் பின்பு கேள்வியுற்ற சாம்பான் மனைவியும் உறவினரும் அவ்வூர் அரசனிடம் சென்று "கிறிமினல்" வழக்குத் தொடர்ந்தனரா? அது கேட்ட அரசனும் திடுக்கிட்டு விரைந்து வந்து உமாபதி சிவத்தை வினவ, அவர் தமது சர்வ வல்லபத்தையும் அவ் அரசனுக்குக் காட்டிவிடுவான் வேண்டி அபிஷேக நீரை உண்ணுதல் மாத்திரத்தால் பக்குவம் அடைந்த தெனப் போற்றப்பட்ட முள்ளிச் செடியையும் தமது கண்ணோட்டத்தால் உடனே சோதியில் மறையச் செய்துவிட்டனரா? இத்துணைப் பெரிய வல்லபம் படைத்த உமாபதி சிவனார் தாமும் கணப் பொழுதில் சோதியைத் தோற்றுவித்து, அதனுள் மறைந்து முத்தியடைய முடியாமல் மற்றைய சந்தான குரவரையும் அவர் வழித்தோன்றல்களையும் போலவே நிட்டையில் இருந்த பாவனையாக நிலத்துட்புதைக்கப்பட்டனர் என்று ஷை குரவர் வரலாறுகளையும் அவர் உஞற்றிய நூல்களையும் கடைபோக உணர்ந்த அறிஞர் எனப் போற்றப்படும் சித்தாந்தப் பிரசாரகர் சிலர் அறுதியிட்டு உரைக்கின்றனரே! இவர் மதித்திறம் வியக்கற்பாலதே!

இஃது இவ்வாறாக, பெற்றான் சாம்பான் எங்கிருந்து வந்தான்? இவன் சரித்திரம் யாது? இப்பெயருடையவர் ஒருவரா? இருவரா? இவற்றை யாருமே நிச்சயமாக அறிந்திலர். இவன் திடீரென்று உமாபதிசிவத்தின் சரித்திரத்துள்ளே புகுத்தப்பட்டான். உமாபதி சிவம் அறியாமலே அவர் பரிசாரகனுக்கு விறகு வெட்டிக் கொடுத்து அப்பரிசாரகன் அளித்த மிச்சில் உணவுகளைப் பெற்று மிசைந்தனன் போலும்! அபிஷேக தீர்த்தத்தால் முள்ளிச் செடிக்குச் சோதியாய் மாறும் பக்குவம் உளதாயிற்று என்று உபகதை வரைந்த கற்பனைக் கருவூலங்கள் உமாபதி சிவத்தின் மிச்சில் உணவால் (பாத்திர பரிகலசேடம்) சாம்பான் தூலம் அமலமடைந்து சோதியாய் மாறும் பக்குவம் பெறுவதாயிற்று எனவும் இனிதின் இயம்பிவிட அறியாதது என்னை? தீக்கைக்கு அருகனான சாம்பான் பாத்திர பரிகல சேடத்துக்கு அருகனாகானா?

பெற்றானுக்கு நடராஜப்பிரபு சொப்பனத்தில் தோன்றிச் சீட்டுக் கொடுத்தனர் என்றார் சிலர். அங்ஙனமாயின் அக்கனவுப் பொருள் நனவுப் பொருளானது எப்படி? அளவில் ஆற்றலுடைய முழுமுதற் கடவுளாகிய நடராஜப்பிரபு தம்மால் முத்தியளிக்க முடியாமற்றான் அவகாசம் இல்லாமற்றான் மருளுடம்பினராய் உபாசக நிட்டையாளராய் வீற்றிருந்த உமாபதி சிவாசாரியருக்குச் சீட்டனுப்பியும் முத்தியை அளித்து விடும்படி அவரை வேண்டிக் கொண்டனரா? முத்தி என்பது மணி பொன் நெல் முதலிய வியாபாரப் பொருள்களுள் ஒன்றாகுமா? அத்தகைய சீட்டைத் தலையில் முடிந்துக்கொண்டு அதனை உமாபதி சிவத்தின் கையில் கொடுப்பதற்கு ஏற்ற சமயம் நோக்கி அவர் பரிசாரகனுக்கு விறகு வெட்டிக் கொடுத்துக் காலம் கழித்த சாம்பான், சில காரணங்களால் அவ் உமாபதி சிவம் தன்னை அறிய நேர்ந்தபோது அச் சீட்டை

அளித்து அவர் கையில் கொடுத்தனன்போலும்! உடனே உமாபதி சிவம் சாம்பான் உடலில் திருக்கண் சாத்தி அவனுக்கு "நிர்வாண தீக்கை" பண்ணிச் சோதியையும் தோற்றுவித்து அவனை அதனுள்ளே மறையச் செய்துவிட்டனர் ஆ! ஆ! ஆ! நன்று! நன்று! இவ் அரிய பெரிய சம்பவத்தை—ஒருகாலத்தும் ஓரிடத்தும் நிகழாத புதுமையைச் சிவநேசரும் கவிராசருமாகிய உமாபதி சிவம் தாம் பரோபகாரமாக உஞற்றிவைத்த நூல்கள் ஒன்றிலாவது கூறினரா? இல்லை! இல்லை! ஏன் கூறவில்லை? உபாசனை தெய்வ சகாயத்தால் கொடியேற்றுதலாகிய அருட் புதுமை விளைத்தமையைத் தாம்பாடிய "கோடிக்கவி" என்னும் நூல் ஒன்றினால் வெள்ளிடைமலைபோல விளக்க வைத்தவரும், தமக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த திருத் தொண்டை நன்னாட்டு வேளாளர் குல திலகரும் சிவநேசரும் புலவர் திலகருமாகிய சேக்கிழார் வரலாற்றைக் கேள்வியால் அறிந்து புராணமாகப் பாடிவைத்தவருமாகிய உமாபதி சிவசாரியர், எல்லாம் வல்ல இறைவனுக்கே யன்றி வேறு ஒருவருக்கும் ஒருகாலத்தும் அமைய முடியாத "முத்தி யளித்தல்" என்னும் சக்தியை அவ் இறைவன் அனுப்பியதாகச் சொல்லப்பட்ட சிபாரிசுச் செய்யுட் கடிதத்தின் படி தாம் வகித்து நடாத்திய இவ் அரிய பெரிய சம்பவத்தை ஒரு நூலாற்றான் ஒரு கவியாற்றான் எட்டுணையாவது கூறாதது என்னை? நடராஜப் பிரபு தமக்குச் சிபாரிசுச் சீட்டு அனுப்பித் தம்மால் உஞற்றுவித்த இத்தொழில்களுள் இறுதிக் கண்ணதாகிய "முத்தி யளித்தல்" என்னும் அரிய பெரிய அநுக்கிரக கிருத்தியத்தையும், மருளுடம்பினராகிய தம்மையும் ஓர் பொருளாகக் கொண்டு அந் நடராஜப் பிரபுவே தம்பினும் மேலாக மதித்துத் திருமுகம் அனுப்பிய பெருங்கருணையையும் நினைந்து நினைந்து வியந்து வியந்து நெக்கு நெக்கு உருகி உருகிப் பாடாமல் சிவநேசரும் கவிராசருமாகிய உமாபதி சிவம் வேறு எதனைத் தான் பாடிவைக்கவேண்டும்? எதனைத்தான் உலகுய்யுமாறு கூற வேண்டும்? தம்மால் பிறர்க்கு அளிக்கப்பட்டதும் தாம் கண்கூடாகக் கண்டு அறிந்ததுமாகிய முத்தி நிலையையே—தூலத்தோடு மறைதல் என்னும் உண்மைச் சைவ முத்தியையே தமக்குப் பிற்காலத்தவராகிய நாம் எல்லாம் ஐயம் திரிபின்றி-அறிந்து அதனையே அவாவி நின்று உய்யும் வண்ணம் அம் முத்தி நிலையையும் அதற்குரிய பொதுவான சாதக யோகங்களையும் (சுத்த சாதகப்போல) வெள்ளிடை மலையாக விளக்கமுறக் கூறாது சந்தான குரவருள் ஒருவர் எனப் புகழப்பட்ட நமது சிவாசாரிய மூர்த்திகள் வேறு எதனைத்தான் விளக்கமுற விரித்துக் கூறவேண்டும்? வேறு எதன் பொருட்டுத்தான் சாத்திரங்களை எழுதிவைக்க வேண்டும்? இவற்றைக் காய்தல் உவத்தல் அகற்றி ஆழ்ந்து நோக்குவார்க்கு உண்மை எளிதிற் புலப்படாததாகுமா? ஆகாது என்பது வெள்ளிடை.

மேல் நடராஜப்பிரபு எழுதி அனுப்பியதாகக் [கற்பிக்கப்பட்ட சிபாரிசுச் செய்யுட் கடிதத்தையும் ஒரு சிறிது ஆராய்ந்து இக்கட்டுரை முடிக்கப்படும். அச் செய்யுள் வருமாறு:—

"அடியார்க் கெளியன் சிற்றம் பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டுப்—படியின் மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை."

இக்கற்பனையின் திருட்டுத்தனத்தை அறிய முடியாத நம்மவர் பலர் இச் செய்யுள் நடராஜப்பிரபு எழுதியது என்றே குருட்டுத் தனமாக நம்பிவிட்டனர். "பேதமறத் தீக்கை செய்து" என்னும் சொற்றொடரே இச்செய்யுளை எழுதிய பிற்காலப் போலி வித்துவப் புலிகளாகிய கற்பனைக் கருவூலங்களின் திருட்டுத்தனத்தையும் ஏழைமதியையும் வெட்ட வெளிச்சமாகக் காட்டுகின்றது. யாரிடம் பேத பாவனை இருந்தது? சாம்பானிடமாயின் அவனுக்கு நடராஜர் சீட்டுக்கொடுத்தது எப்படி? அப்பாவனை சிவாசாரியரிடம் இருந்தது என்றாலும் சாம்பானிடம் இருந்தது என்றாலும் முத்தி அளித்தலும் அதனைப் பெறுதலும் எவ்வாறு கைகூடும்? பேத மற்று ஓ வடிவம் பெற்றிருந்தலே "தான் அவன் ஆகும் சமாதி" நிலை என்பது உண்மை நூற்றுணிபாகலின் (திருமந்திரம் 8ம் தந்திரம் மலாவத்தை செ. 17; சுத்த சாதகம். செ. 69, 70) அத்தகைய சிவன் முத்தி நிலையடையும் பக்குவம் இன்றி மருளுடம்பினராய்ப் பேதமறாத உபாசக நிட்டை யாளராய் வீற்றிருந்த உமாபதி சிவாசாரியருக்கு "பேதமறத் தீக்கை செய்து, முத்தி கொடுக்க முறை" என்று நடராஜப்பிரபு சிபாரிசுக் கடிதம் (Letter of recommendation) அனுப்பிவிட்டனரா? இது வியப்பினும் வியப்பே! விந்தையினும் விந்தையே! ஆ! ஆ! நடராஜா! நடராஜா! முத்தி நிலை என்பது நிறைமுறை அறியாக்கற்பனைக் கருவூலகங்களாகிய சைவக் குன்றிமணிகளுக்கு ஒரு வகை வியாபாரம் போலும்! உண்மைச் சைவம் நிறைமுறை அறியாக் கற்பனைக் கருவூலங்களால் புறமதத்தவரும் எள்ளி நகையாடுதற்குரிய திருட்டுச் சைவமாக மாறிவிட்டதா? அந்தோ! அந்தோ! கலிவலி இதுவே போலும்!

நிறைமுறை இல்லாத இக்கற்பனையால் பெறப்படுவது யாது? உண்மைச் சைவ முத்தியின் அருமை பெருமையை ஒரு சிறிதும் அறிய முடியாத சிலர் தமது அறியாமைப் பயனாகிய அபிமானத்தால் சிவநேசரும் வித்துவப் பெரியாருமாகிய உமாபதி சிவாசாரியருக்குச் சர்வ வல்லபத்தையும் சுமத்திவிடத் துணிந்து அவர் நடராஜப்பிரபு அனுப்பிய சிபாரிசுக் கடிதத்தின்படி பெற்றான் சாம்பானுக்கும் முள்ளிச் செடிக்கும் கணப்பொழு

னுள்ளே முத்தி அளித்துவிட்டனர் என்னும் பொருந்தாப் பொய்க் கதையைப் பொறித்து வைத்துவிட்டனர் என்பதேயாகும். உமாபதிசிவம் என்பார் ஆவேசிக்கப்பட்டோ தாமாகவோ பெற்றான் சாம்பானுக்கும் முள்ளிச்செடிக்கும் முத்தியளித்தனர் என்ற உபகதையே பொருந்தாக் கற்பனையாகிய பொய்யுரை என்று முழுப் பொய் என்று இங்கே விரிவுற மறுத்துரையாடப்பட்டது. அன்றி, பெற்றான் சாம்பான் என்னும் ஒருவருக்கோ இருவருக்கோ முள்ளிச்செடிக்குமோ முத்தி கிடைத்ததென்பதும் கிடைக்கவில்லை என்பதும் இங்கே ஆராய்ந்து அறுதியிட்டு உரைக்கப்படவில்லை என்பதனை அறிஞர் தெரிந்துகொள்வாராக. உண்மை நூற்பிரமாணம் கொண்டும் யுத்திப் பிரமாணம் கொண்டும் புடைபட ஒற்றி ஆராய்ந்து உண்மையை நிறுவுதல் சிவநேசரும் கவிராசருமாகிய உமாபதிசிவாசாரியர் போன்ற பெரியாரை ஒரு சிறிதாவது இகழ்வதாகாது என்பதனையும் அபிமானப் பேயால் ஆவேசிக்கப் படாத நல்லறிஞர் செவ்விதின் உணர்ந்துகொள்வார் என்பது திண்ணம். உண்மை கூறுதல் புகழ்ச்சியேயன்றி எவ்வாற்றானும் இகழ்ச்சியாகாது என்பது வெள்ளிடை. இவ்வாறே மற்றைய குரவர் பெருமைக்கும் இழுக்கு நேரும்படி அவர் மேல் சுமத்திச் சைவத்தைப் பாழ்படுத்திய கற்பனைகளும் உண்டு. அவையெல்லாம் ஈண்டு விரிப்பின் மிகப் பெருகும். அமயம் நேரும்போது விரித்துக் கூறப்படும். அறியாமைப் பயனாக நேர்ந்த இவ்வாறான பொருந்தாக் கற்பனைகளாகிய ஊழல்கள் கையறியாமாக்களால் காலந்தோறும் நமது அரிய பெரிய சைவ சமயத்துட் புகுத்தப்பட்டமையே உண்மை மறைந்திருப்பதற்குக் காரணமாயிற்று என்பது மிகையன்று. உமாபதிசிவம் அநுக்கிரக கிருத்தியம் உஞற்றி விட்டனர் என்பது போன்ற சழக்குரைகள் கிறிஸ்த, பௌத்த, மகமதிய சமய நூல்களிலும் நிரம்பியுள்ளன. மேலே கூறிய விஷயங்களையெல்லாம் சில்லாண்டுகளின் முன்னர் எம்மால் வெளியிடப்பட்ட உண்மை முத்திநிலை என்னும் கட்டுரையில் வெளிப்படையாக விரித்துக் கூறுது பொதுவகையால் சந்தான குரவரைப் பற்றியும் சிறப்பு வகையால் அவருள்ளும் உமாபதி சிவாசாரியர் என்பவரைப் பற்றியும் சில பல உபசாரமாகவும் சமக்கிளையாகவும் கூறி உண்மையை உய்த்துணரவைத்ததன் காரணம் யாதெனில் கூறுதும்:—

உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி அமலமடைந்து சூக்குமமாய் அருளாய் உலகுகண்டிட ஞானாகாசத்தில் மறைதல் என்னும் உண்மைச் சைவ முத்திநிலை பண்டைக்காலத்து இருடிகள் முனிவர்களாலும் மணிவாசகர், மூவர், திருமூலர் முதலிய மெய்யடியாராலும் தம் தம் அருள் வாக்காலும் அரும் பெரும்செயலாலும் வெள்ளிடை மலை போலக் காட்டப்பட்டதேயாயினும், தூலம் எவ்வாற்றானும் பிணமாகி விழுந்தபின், அதனைப் பிரிந்த உயிர் சிவத்தோடு அத்துவிதமாய்க் கலந்துவிடும் என்னும் சித்தாந்தமே தற்காலம் தமிழ் நாட்டில் தாண்டவம் புரிகின்றமையால், சமய குரவர் காலத்துக்குப் பின்னே தோன்றிய சிலர் வேதாகம உண்மை என்று கண்டுபிடித்த மேலே கூறிய சித்தாந்தத்தைக் கைக்கொண்டவர் பலரால் ஒப்புக்கொள்ளப்படாததும், அச் சித்தாந்தத்துக்குக் கீழ்ப்படியில் உள்ளது என வித்துவான்கள் சிலரால் மனம் போனவாறு கண்டிக்கப்பட்டதும் வேதாகமோக்த சிவாத்துவிதசைவ சித்தாந்த உண்மையைப் பெரிய நாயகி அருளால் உணர்த்த எழுந்ததுமாகிய சுத்த சாதகம் கூறிய உண்மைச் சைவ முத்திநிலை தடையின்றி யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுதல் எளிதின் முடிவதன்று என அறிந்த யாம் அம் முத்தி நிலையையே இயன்றவரை விளக்கி வெளிப்படுத்த முயன்றபோது, அம்முத்தி நிலையை அடையும் பக்குவம் பெறுத நிலத்துட் புதைக்கப் பட்ட மெய்கண்டார் முதலிய சந்தானகுரவரைப் பற்றி ஆரம்பத்தில் சில பல உபசாரமாகக்கூறாது, முற்றாக உண்மையையே உரைத்துவிட்டால் தற்காலச் சைவர்கள் எம்மீது சீற்றங்கொண்டு பழைய உண்மைச் சைவ முத்தி நிலையையுமே ஒப்புக்கொள்ளாது முற்றாகப் புறக்கணித்து விடுவார்கள் என நினைந்தே அவ்வாறு சில பல கௌரவ மொழிகள் உபசாரமாகக் கூற வேண்டியது இன்றியமையாததாயிற்று என அறிதல் வேண்டும். அன்றி அக்கௌரவ மொழிகள் பொதுவகையான் அக்குரவருக்குத்தான் அவருள்ளும் சிறப்புவகையான் உமாபதி சிவாசாரியார் என்பாருக்குத்தான் மற்றைய வித்துவப்பெரியாருக்குத்தான் ஒருபொழுதும் உரியனவாகா என்பதனை முன்னுக அறியாதிருந்தேம் அல்லேம். ஆதலால் உண்மையை நிலைநாட்டுதலாகிய "புரை தீர்ந்த நன்மை" கருதி யாம் ஆரம்பத்தில் கூற நேர்ந்த கிரோதான ஔபசாரிக மொழிகளையும் நன்குணர்ந்து எம்மை மன்னித்துக் காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்ந்து உண்மை கடைப்பிடிப்பது அறிஞர் கடன் எனக் கூறி இவ்வளவில் முடிக்கின்றோம். மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் நிறைமுறை இல்லாக் கற்பனைகளால் பொய்யே உணரப்படும் என்பதும், சந்தான குரவருள் ஒருவராகிய உமாபதி சிவாச்சாரியர் என்பார் பிறர்க்கு முத்தி அளித்தனர் என்பது நிறைமுறை இல்லாப் பொய்க் கற்பனையே என்பதும், இவ்வாறான பொய்க் கற்பனைகளாற்றான் உண்மைச் சைவம் பழுதடைந்த தென்பதும் ஒருவாறு உணரப்படும்.

ஜயம்.

சுத்தசாதகம் விலை அணா 2.
திருவாசக உண்மை
விலை அணா 2.
நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

உடலுயிர்ச் சம்பந்தம்

(42-ம் வாரத்தொடர்சி)

அன்பே சிவம் என்பதும் உடலுயிர் பிரிபடாதன என்பதும் இதனால் நன்கு காட்டப்பட்டன. தலைநட்பாளர்க்குரிய அன்பு மயமான உடலை விட்டு உயிர் பிரியாது அவ்வுடலும் உயிரும் அள்ளூறிய அன்பினால் ஒழிவற ஒன்றிச் சூக்குமமாய் நித்தியத்துவம் அடையும். இடை நட்பினர் உடலுயிரும் ஒழிவற ஒன்றுதலை நாடுவனவே. கடை நட்பினர் உடலைவிட்டு உயிர் பிரிந்து பூரணப்படாமையால் அத்தகைய பிறிதோர் சம்பந்தத்தை நாடுதல் ஒருதலையாகலின், அன்பின் வழி நில்லா அன்னவர் உடம்பு வாளா என்பு தோல் போர்த்த உடம்பு எனப்பட்டது. இடை நட்பாளர் அன்பின் வழி நின்று படியேற்றம் பெறவேண்டும் என்பது இதனால் வற்புறுத்தப்பட்டது.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

(இ-ள்) சாவாமருந்து எனினும்-- கல்வியில் வல்லனாய் ஆப்த நண்பனாய் உள்ள ஒருவன் அரிய மருந்து ஒன்றைக் கண்டு பிடித்து சாத்திரமுறைப்படி அதனைச் செய்து முடித்து. "இது சாவா மருந்து" என்று ஒருவன் பாட்டு வைத்த அன்பினால் அவனுக்கு வழங்குவானாயினும், விருந்து புறத்தது ஆ—அம் மருந்து அவனது தூல பௌதிகபஞ்சீகரணிப்புக்குப் புறம்பானதாகுமாயின், தான் உண்டல் வேண்டற் பாற்று அன்று— அதனை அவன் உண்ணுதல் விரும்பும் பகுதியினை உடையதன்று.

சற்குருநாதன் விதிவழி ஒழுகும் பக்குவான்மாக்கள் முன்னிலை உணவுகளை நிறையும் இனமும் அறிந்து உண்டு பௌதிகத் தூய்மையடைவர். அன்னார் விதிபிறழ்ந்து தமது பௌதிக பஞ்சீகரணிப்புக்கு மாறான உணவுகளை உண்பாராயின், அவர் உயிர்நிலை கேடடைதல் திண்ணம் என்பது இதனால் வற்புறுத்தப் பட்டது.

உலகத்திலே தமது தூல பௌதிக பஞ்சீகரணிப்பின் இயல்பை அறியும் ஆற்றலில்லாதார் சிலர் (போலிச் சித்தர்) "பிறப்பறுக்க லுற்றார்க் குடம்புமிகை" (குறள்) என்றவாறு அநித்தியமாகிய செடிசேருடலை மாற்றும் நெறி காணாது, அம்மருளுடம்போடு நித்தியத்துவம் அடையலாம் என்று கருதிச் சாவா மருந்து என்று சில கருக்களை (மருந்துகள்-மூலிகைகள்)க் கண்டு பிடித்து உண்டு சிலகாலம் வதிந்து அருந்தியது பொருந்தாமையால் பௌதிகங்களின் நிறை பேதப்பட மாண்டுபோவர் "அனித்தமான வூன் நாளும் இருப்பதாகவே நாசி அடைத்து வாயு ஓடாதவகைசாதித், தவத்திலேகுவான் மூலி புசித்து வாடும் ஆயாச அசட்டு யோகியாகாமல்" (திருப்புகழ்) என்றார் அருணகிரி நாதரும். பரகாயப் பிரவேசம் செய்வதும், வேறொருவர் காணாமல் உலகத்து உலாவுவதும், இன்னோரன்ன பிறவும் சிலகருக்கள் கூட்டுறவினால் செய்யப்பட்ட ஒருவகையான கருவான் முடியும். இவற்றைத்தான் உலகமாக்கள் கண்டு மயங்குவது. இவ் அசடரே உலக குருவராய்ப் பக்குவான்மாக்களுக்கு உபதேசிக்கின்றார் என மயங்குவாரும் உளர் "புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே உண்டியா அண்டவாணரும் பிறரும், வற்றியாரும் நின்மலரடி காணா மன்ன" (திருவாசகம்) என்னும் பிரபல தெய்வச் சுருதியின் உண்மைப் பொருளையும் இவர் அறிந்திலர். முன்னிலைக் கருவைப் பஞ்சீகரணித்தால் அட்டமா சித்திகளும் காட்டப்படலாம். இவை போலியேயன்றி உண்மையல்ல. சித்திகள் எல்லாம் கர்மமேயன்றி ஞானமன்று எனச் சிலர் கூறுவதன் உட்கருத்து இதுவே. அமல முதற்படியை மிதித்த இடை நட்பாளரே— ஞானிகளே வாய்மையான அட்டமா சித்தி முதலியனவற்றிற்கு உரியர் என்க. சற்குருநாதனாகிய எம்பெருமான் சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கேற்ப அருளும் விதிப்படி உணவு மருந்து என்பனவற்றை அருந்தி ஐம்புலத்தாறு ஓம்பி முன்னிலை — சரீரம் அமலமடைதலால் சாவாமையாகிய நித்தியத்துவம் உளதாகுமேயன்றி, உலகமாக்கள் தங்கள் கல்விவன்மையால் கண்டு பிடித்துச் செய்து முடிக்கும் போலி மருந்துகளால் நித்தியத்துவம் உளதாகும் என்பது வெற்றுரையே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

(தொடரும்)

"வித்தகம்"

வருடசந்தா

முன்பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0

மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry Le Gérant, R. Nagarattinam